


22.10. 2024

தலைப்புச் செய்திகள்

1. பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி, இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

2. ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் 78 சதவிகித ஊரக குடியிருப்புகளுக்கு குழாய் வழி குடிநீர் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

3. நாமக்கல் மாவட்டத்தில் 810 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

4. தீபாவளி பண்டிகையையொட்டி கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் 100 கோடி ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயித்துள்ளதாக மாநில கைத்தறி துணிநூல்துறை அமைச்சர் திரு.காந்தி தெரிவித்துள்ளார்.

5. மலேஷியாவில் நடைபெறும் சுல்தான் ஜோஹர் கோப்பை ஆடவர் ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா - மலேஷியாவை இன்று மாலை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

ரஷ்ய நாட்டின் கஸான் நகரில் நடைபெற உள்ள 16ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ள பிரதமர் திரு.நரேந்திரமோடி, அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புட்டினுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக இன்று ரஷ்யா புறப்பட்ட பிரதமர் வெளியிட்ட அறிக்கையில் தமது இப்பயணம் இந்தியா - ரஷ்யா இடையேயான சிறப்பான அரசியல் நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று கூறியுள்ளார்.

பிரிக்ஸ் நாடுகளுடனான நட்புறவிற்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருவதன் மூலம் காலநிலை மாற்றம், வலுவான உணவு சங்கிலி, கலாச்சார

பரிவர்த்தனைகள், பண்முக தன்மை உள்ளிட்டவை முன்னெடுத்துச் செல்லப்படுவதாக குறிப்பிட்டார்.

பிரிக்ஸ் அமைப்பில் புதிய உறுப்பினர்களின் இணைப்பு மூலம் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சர்வதேச நலன்கள் மேம்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

குடியரசு தலைவர்

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் நாடுமுழுவதும் 78 சதவிகித ஊரக குடியிருப்புகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 5-வது தேசிய நீர் விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர், 2019ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, 17 சதவிகித ஊரக குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதுகாப்பான குடிநீர் வசதிகள் இருந்ததாக எடுத்துரைத்தார்.

நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் மாநில அரசுகளின் பங்கை குறிப்பிட்ட அவர் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவது குறித்து கவலை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் நீர் பராமரிப்பில் சிறப்பாக செயலாற்றிய ஒடிசா மாநிலத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த மாவட்டம், சிறந்த ஊராட்சி ஒன்றியம், சிறந்த நீர் பயன்பாடு சங்கம் உட்பட 9 பிரிவுகளில், 38 விருதுகளை குடியரசு தலைவர் வழங்கினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நிர்மலாசீதாராமன்

இந்திய நாட்டின் வங்கி செயல்பாட்டு முறை வலுவாக உள்ளது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

நியூயார்க் கொலம்பியா பல்கலைகழகத்தில் “சர்வதேச தேக்க நிலையில் நாட்டின் பொருளாதார மீட்சி” என்ற தலைப்பில் உரையாற்றிய அவர், முக்கிய தொழிற்சாலைகளில் முதலீடுகளை அதிகரிக்க, நிதி ஒதுக்கீட்டால் நிலையான வளர்ச்சி ஏற்பட்டதாக குறிப்பிட்டார்.

மின்னணு கட்டமைப்பில் முதலீடுகளை எடுத்துரைத்த அவர், நெருக்கடிகளை தாங்கும் திறனுடன் இந்தியாவின் பொருளாதாரம் வலுவாக உள்ளதாக கூறினார்.

பாரத்மாலா, சாகர்மாலா போன்ற இணைப்பு திட்டங்களால் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடி நிலையிலும் இந்தியாவின் பொருளாதார அடிப்படைகள் வலுவாக இருப்பதால் வளர்ச்சி சாத்தியமாவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

2013 ஆம் ஆண்டு 10ஆவது பொருளாதார நாடாக இருந்த இந்தியா, தற்போது 5ஆவது பொருளாதார நாடாக உருவெடுத்திருப்பதை சுட்டிக்காட்டிய அவர், அடுத்த 5 ஆண்டுகளில் சர்வதேச நாடுகளின் வளர்ச்சியில் இந்தியாவின் பங்களிப்பு 200 அடிப்படை புள்ளிகளாக உயரும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சக்தி காந்த தாஸ்

நாட்டின் வளர்ச்சி விகிதம் அதன் அடிப்படை தன்மைகளான நுகர்வு மற்றும் முதலீடுகளின் தேவை அதிகரிப்பால் சீராக உள்ளது என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

ரிசர்வ் வங்கியின் மாதாந்திர அறிக்கையில் இன்று இதனை தெரிவித்துள்ள அவர், நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டில் 7.2 சதவிகிதமாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

வேளாண்மை மற்றும் ஊரக தேவைகள் உயர்வால், தனி நபர் நுகர்வு அதிகரித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளால் மத்திய மாநில அரசுகளின் செலவினம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

நுகர்வோர் பண வீக்க குறியீடு நடப்பு நிதியாண்டில் 4.5 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாகவும் திரு.சக்தி காந்த தாஸ் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கஜேந்திரசிங்

நாட்டில் வரும் 2029ம் ஆண்டிற்குள் ஒருங்கிணைந்த சுற்றுலாத்துறை 500 பில்லியன் டாலர் அளவிற்கு வளர்ச்சியடையும் என்று, மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில், சுற்றுலாத்துறை சார்பில் இரண்டு நாள் கண்காட்சியின் துவக்கவிழாவில் இன்று உரையாற்றிய அவர், இதனை தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல்

மகராஷ்டிர மாநிலத்தில் ஒரே கட்டமாக 288 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டதை தொடர்ந்து வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது.

இதேபோல் ஜார்கண்ட் மாநிலத்தில் 38 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆவது கட்ட வாக்குப்பதிவிற்கான மனு தாக்கலும் இன்று தொடங்கியது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

நாமக்கல் மாவட்டம் பொம்மை குட்டைமேட்டில் 810 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டுவதுடன் முடிவடைந்த திட்ட பணிகளை தொடங்கிவைக்கிறார்.

இந்நிகழ்வில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்குகிறார்.

நாமக்கல் முதலைப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தையும் அவர் பார்வையிடுகிறார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

காந்தி

தீபாவளி பண்டிகையையொட்டி கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் நடப்பாண்டு, 100 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறி துணிகளை விற்பனை செய்ய இலக்கு

நிர்ணயித்துள்ளதாக மாநில கைத்தறி துணிநூல்துறை அமைச்சர் திரு.காந்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இதனை தெரிவித்த அவர் வரும் பொங்கல் பண்டிகைக்கு, ஒரு கோடியே 77 லட்சம் வேட்டி சேலைகள், குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறினார்.

கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் மின் வணிக விற்பனை மூலம், ஒரு கோடியே 10 லட்ச ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சேகர்பாபு

சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் விரைவில் மலிவுவிலை உணவகம் அமைக்கப்படும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பேருந்து நிலையத்தில் குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அதிகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

இப்பேருந்து முனையம் அருகே 16 ஏக்கரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் காலநிலை பூங்கா விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று திரு.சேகர்பாபு தெரிவித்தார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சக்ரபாணி – வாய்ஸ்:

சென்னை கோபாலபுரத்தில் அமுதம் மக்கள் அங்காடியில் அமுதம் ப்ளஸ் என்ற மளிகைத் தொகுப்பை மாநில உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.சக்ரபாணி இன்று தொடங்கிவைத்தார்.

கடுகு, மிளகு, வெந்தயம், சீரகம் உள்ளிட்ட 15 பொருட்கள் அடங்கிய தொகுப்பு 499 ரூபாய்க்கு விற்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

- - வாய்ஸ் --

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சி.வி கணேசன்

சென்னை பல்லாவரம் இ.எஸ்.ஐ. மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை மாநில தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் இன்று ஆய்வு செய்தார்.

நோயாளியிடம் சிகிச்சை வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு மருந்துகளின் கையிருப்பையும் அவர் பார்வையிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மா.சு:

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் 9 கோடியே 90 லட்ச ரூபாய் செலவில் புதிய கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை, மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் இன்று தொடங்கிவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வெம்பகோட்டை

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெறும் 3ஆம் கட்ட அகழாய்வு பணியின் போது சுடுமண்ணால் ஆன அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தஞ்சை சாஸ்த்ரா

ஆஸ்திரேலியாவை தலைமையிடமாக கொண்டு இயங்கும் டீக்கன் பல்கலைகழகத்துடன் தஞ்சை சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைகழகம் ஃான.இ பாட திட்ட பிரிவில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் ஆஸ்திரேலியாவிற்கு நான்கு நாள் அரசு முறை பயணமாக சென்றுள்ளதன் ஒருபகுதியாக இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

சாஸ்த்ரா பல்கலைகழக துணை வேந்தர் டாக்டர் எஸ்.வைத்திய சுப்பிரமணியம் மற்றும் டீக்கன் பல்கலைகழக துணைவேந்தர் டாக்டர் டேவிட் ஹலிவலி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் ீனா.இ பயில விரும்புபவர்கள் சாஸ்த்ரா அல்லது டீக்கன் பல்கலைகழகத்தில் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி:

தர்மபுரி, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உங்களைத்தேடி உங்கள் ஊர் திட்டம் நாளை உத்திரமேரூர் வட்டத்தில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் மற்றும் கோட்டூர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணாக்கர் நேரடி சேர்க்கைக்கு வரும் 30ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாசற்ற தீபாவளியை கொண்டாடுவது குறித்து ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா தலைமையில் இன்று ஆய்வு நடைபெற்றது.

தோவாலை ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சி பணிகளையும் அவர் ஆய்வு செய்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

கிழக்கு மத்திய வங்க கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுப்பெற்றது.

இது நாளை புயலாக வலுப்பெற்று வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை மறுநாள் ஒடிசா, மேற்கு வங்கத்திற்கு இடையே கரையை கடக்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே நீலகிரி கோவை ஈரோடு திருப்பூர் தேனி திண்டுக்கல் சேலம் நாமக்கல் தர்மபுரி கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

மத்திய கிழக்கு, மத்திய மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, வங்க கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 2 நாட்களுக்கு இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வெள்ள அபாயம்

திருவண்ணாமலை மாவட்டம் குப்பநத்தம் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரித்திருப்பதால் செய்யாற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜவ்வாது மலையில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் குப்பநத்தம் அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஹாக்கி

மலேஷியாவில் நடைபெறும் சுல்தான் ஜோஹர் கோப்பை ஆடவர் ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா - மலேஷியாவை இன்று மாலை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ் - நெட்பால்

தைவான் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இன்று முன்னேறினார்.

பெங்களூருவில் ஆசிய நெட்பால் சேம்பியன் பட்ட போட்டியில் இந்தியா இன்றுமாலை மலேசியாவை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு